## ஞாலகுருவின் படைப்புக்கள்

# மெய்யான இந்துமதப் பயிற்சிப் பள்ளியே

# குருகுலம்



இம்மண்ணுலகில்
பதினெண்சித்தர் பீடாதிபதிகளாகத்
தோன்றுபவர்கள்தான் தங்கள்
ஓவியத்துடனே அல்லது சிலைகளுடனே
தாங்கள் தரக்கூடிய ஏந்தரீக, தாந்தரீக,
மாந்தரீக, ... இயந்திரங்களும்,
சக்கரங்களும் இணைத்துத்
தரமுடியும்.


அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானச்சாரியார்,
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரணோடையில் கோயில் கொண்டருளுபவர்)



மெய்யான இந்துமத ஆண்டு 43,73,123 புரட்டாசி மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

# உள்ளுறை

1. **“மெய்யான இந்துமதப் பயிற்சிப் பள்ளியே பதினெண்சித்தர் மடத்தின் குருகுலம்”** - குருதேவர் அவர்கள் அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் திரு நெ.சேவுகன் அவர்களுக்கு எழுதிய நெடிய அஞ்சல்.
2. **“இராசிபுரம் தேர்தல் களத்தில் இந்து மறுமலர்ச்சி இயக்க அடியானின் அனுபவம்”** - இ.ம.இ.யின் சார்பாக இராசிபுரம் தொகுதியில் சட்டமன்றத் தேர்தலில் நின்ற வேட்பாளருக்காக செயல்பட்ட திருவையாறு அடியான் ஒருவர் எழுதிய கட்டுரை.
3. **“ஒரு முயற்சி! அதில் வெற்றி! அதனால் மகிழ்ச்சி...?!!!”** - திருவையாறு அடியான் ஒருவர் தாமே குருதேவரின் ஆணை பெற்று இராசிபுரத்தைச் சேர்ந்த குடும்பத்தாருக்கு செய்த பரிகாரப் பூசையின் வெற்றி பற்றி எழுதிய கட்டுரை.
4. **“வாழ்த்துத் திருவோலை!”** - கோவையைச் சேர்ந்த புதிய அறிமுகத்தாருக்கு குருதேவர் அவர்கள் தலைமைப்பீடத்திலிருந்து எழுதிய நெடிய விளக்கக் கட்டுரை.
5. **“நலம் நாடும் திருவோலை”** - விரகாலூரைச் சேர்ந்த சித்தரடியாளுக்கு குருதேவர் அவர்கள் ஊக்கம் தந்து எழுதிய திருவோலை.
6. **“அருளாட்சி அமைப்புப் பணித் துவக்கத்தின் இரகசியங்கள்”** - மதுரைச் சித்தரடியானுக்கு குருதேவர் அவர்கள் எழுதிய சுருக்க விளக்க அஞ்சலின் முதல் பத்தி மட்டும். மற்ற பத்திகள் இப்பொழுதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு வெளியிடப்படவில்லை.
7. **“ஞானம், அருள் என்பதின் விளக்கம்”** - நாமக்கல் சித்தரடியான் ஒருவருக்கு குருதேவர் எழுதிய அஞ்சலில் இருந்த குருபாரம்பரிய வாசகமும், அதனை ஒட்டிய விளக்கமும் மட்டும் பின் உள் அட்டைப்பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

# மெய்யான இந்துமதப் பயிற்சிப் பள்ளியே பதினெண்சித்தர் மடத்தின் குருகுலம்

ஓம்

தலைமைப்பீடம்,
3-6-88.

அன்பும் பண்பும் நிறைந்த வீரமாகாளி சன்னிதானம் திரு நெ.சேவுகன் அவர்களுக்கு,

ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் தலைமைப்பீட அஞ்சல் நாயகம் இளந்துறவி சுந்தரானந்தா குருதேவர் சொல்லச் சொல்ல அப்படியே எழுதும் நெடிய அஞ்சல்:

1) தங்களுடைய 1-6-88 தேதியிட்ட அஞ்சல்தான் (DRR No.: 326 / 3984) முதன்முதலில் நெடிய ஓராண்டுக் கால இடைவெளிக்குப் பிறகு உண்மையிலேயே உங்களை முதன்முதலில் 1972இல் குருதேவர் சந்தித்த போது தங்களிடம் இருந்திட்ட பேரார்வமும், தியாகச் சிந்தையும், குருவுக்காக மனைவியையே துறந்து விட்டு வந்த பக்குவத்தையும்; அறிவார்ந்த அருளுக்காக ஊதியம் அனைத்தையும் செலவிட்ட ஞானப்பித்தின் நிலையையும்; குருவின் முன்னால் மெய்யொடுங்கி கைகட்டி, வாய்புதைத்து, கண்களில் எப்பொழுதும் ஆனந்தக் கண்ணீர் துளிர்த்த சிந்தையும் நெஞ்சும்; குருவாணை எதனையும் நிறைவேற்றும் நிருவாண நிலையையும், ... பெற்றிருந்தது போலப் பெற்றிருக்கிறது.

"தன்னையறிந்தால் தலைவனை அறியலாம்; தலைவனை யறிந்தால் தன்னை யறியலாம்",

"தன்னை யறியும் அறிவே மெய்யறிவு; பின்னையறிவு பேயறிவு",

“எல்லாமே குருவுக்காக; குருவே எல்லாமாக இருக்கிறார்” முதலிய வாசகங்களுக்கு ஆரம்பக் காலத்தில் புரிந்த விளக்க நிலையில் மட்டுமே இருக்கின்றீர்கள். இனிமேலாவது இது மேலும் மேலும் வளர வேண்டும். சோதனைகளும், வேதனைகளும் இனியாவது நிற்கட்டும். அவை உங்கள் சாதனைகளுக்குக் கண்களாகட்டும்.

2) உங்களால் உடல் நலமடைந்தோர் சில இலட்சம் பேர்களாவது இருப்பார்கள். அவர்கள் யாரும் உங்கள் பின்னால் வரவில்லை. எனவே, இனிமேலாவது ஆவி, ஆன்மா, ஆருயிர்களுக்கு நலமளிக்க முற்படுங்கள்.

3) கடந்த ஓராண்டு காலமாக M.S.R., துரைராசன், செகதீசன், கேசவன், N.S. சாமிநாதன், பா. மோகன், ... போன்ற அடியான்களுக்குத் தலைமைப் பீடத்திலிருந்து வந்துள்ள கடிதங்களையெல்லாம் கேட்டு வாங்கி நகலெடுக்க முற்படுங்கள். மதுரையிலேயே துரை அல்லது காசி வீட்டில் தங்கி நகல் எழுதிவிட்டு மூலத்தை அவரவரிடம் பத்திரமாகத் திருப்பித் தந்திடுங்கள். தாங்கள் எழுதுவனவற்றின் ஒரு நகலைக் குருகுலத்திற்கு வைத்துக் கொள்ளுங்கள். மற்றொரு நகலைத் தலைமைப் பீடத்திற்கு அனுப்பி விடுங்கள். குருகுலத்தில் நகல்களைப் பைண்டிங் செய்து விடுங்கள். இதை உடனடியாகச் செய்ய ஆரம்பித்திடுங்கள். அப்பொழுதுதான் நமது வளர்ச்சி நிலைகள் தங்களுக்குப் புரியும்.

4) இதுவரை வெளிவந்துள்ள குருதேவர் அறிக்கைகள் அனைத்தும் தங்களிடம் உள்ளனவா? இல்லையென்றால் தலைமைப் பீடத்திலிருந்து கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். அனைத்தையும் திருப்பித் திருப்பிப் படித்துப் பல்வேறு தலைப்புக்களில் குருதேவர் அறிக்கைகளிலிருந்து மேற்கோள்களாகச் சிறுசிறு பகுதிகளிலிருந்து எடுத்தெழுதி விரிவுரைகளும், பெரிய சொற்பொழிவுகளும் தயாரித்திடுங்கள். அவற்றை பைண்டிங் செய்த நோட்டுகளில் எழுதி வைத்திடுங்கள். உங்களை **நமது கொள்கை விளக்க நடமாடும் நூலகமாக** மாற்றிக் கொள்ளுங்கள்.

5) மிக விரைவில் காரியேந்தல்பட்டிக் கிராம மூல அறையும் பழுது பார்த்துத் தரப்படும். கவலை வேண்டாம். குருகுலத்திற்குள் சரியான வடிவமைப்பு ஏற்படுத்தப்பட்டிடும். கொட்டாம்பட்டி மூலச் சாலையில் ஒரு பெரிய சிமெண்டு விளம்பரப் பலகை நிறுத்திக் கருப்பு வண்ணப் பின்னணியில் வெள்ளை எழுத்துக்களில்

**'பதினெண்சித்தர் மடம்',**

**'குருகுலம்',**

**'மெய்யான இந்துமதப் பயிற்சிப் பள்ளி',**

... என்று தலைப்பிட்டுப் பல விளக்கங்களை எழுதிடுவோம். யாரும் குருகுலத்தை உரிமை கொண்டாடித் தூக்கிக் கொண்டு போய் விட மாட்டார்கள்.

உலகம் உள்ளவரை ***'காரியேந்தல்பட்டி நெ.சேவுகன் என்ற அருளாளன் காலப்போக்கில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, நான்கு யுக நாயகம், நிறை யக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், எல்லாம் வல்ல சித்தர், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களிடம் அடியானாகிப் பல வெற்றி தோல்விகளைச் சந்தித்துச் சாதித்த சாதனையே இந்த மெய்யான இந்துமதப் பயிற்சிப் பள்ளி எனும் பதினெண்சித்தர் மடக் குருகுலம்'*** என்ற வரலாறு நிலைத்து நிற்கும். உங்களை மூடி மறைக்கவோ, அகற்றவோ யாரும் முயல மாட்டார்கள்.

"அன்புச் சேவுக!" என்று உம்மை அழைத்து எழுதப்பட்ட அஞ்சல்கள் இலக்கிய உலகிலும், அருளுலகிலும், வருங்கால ஆராய்ச்சி உலகிலும் அழியாத நிலைபேறு பெற்று விட்டன. இப் பெறற்கரிய பேறு வேறு யாருக்கும் இன்னும் வழங்கப்படவில்லை.

6) **"ஊராரின் புகழுக்காகவோ, ஏச்சுக்காகவோ, பேச்சுக்காகவோ மயங்கவோ, அச்சப்படவோ, கூச்சப்படவோ செய்கிறவனால் எள்முனையளவு சாதனையைக் கூட எக்காலத்திலும் செய்ய முடியாது.**

**குருதேவரைக் குரங்குப் பிடியாக, முதலைப் பிடியாகப் பிடித்துக் கொள்கிறவனால்தான் கடையவனாக இருந்தாலும் கடைத்தேற முடியும். ஊசலாட்டம் உடையவன் எத்தகைய உயர்விற்கு உரியவனானாலும், எத்தகைய அரிய பெரிய தொண்டுகளைக் குருவுக்காக ஆற்றினாலும் கடைத்தேறவே முடியாது" - *குருபாரம்பரிய வாசகம்.*** [அனேகமாக முதலாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் வாசகங்களாக இருக்கலாம். குருதேவருக்கு நினைவில் இல்லை.]

7) உங்களுடைய உடம்பாகக் குருகுலம் இருக்கட்டும்; உயிராகக் குருதேவர் இருக்கட்டும். குருகுலத்தில் உங்கள் குடும்பம் மட்டுமே இருக்கட்டும். அவர்களும் விரைவில் குருவைப் புரிந்து தங்களைப் போல் **"குருதேவருக்குள் அவர்கள்; அவர்களுக்குள் குருதேவர்"** என்ற நிலையை எய்தட்டும்.

குருகுலத்திற்காக ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படக் கூடிய கடன்களைப் பற்றிய விவரங்களைத் தெளிவாக எழுதி நிருவாகக் குழுவிடம் ஒப்படையுங்கள். அவர்கள் மூலம், காலப்போக்கில், கூடுமானவரை விரைவில் யாவும் நலமாக்கப்படும். அவசரம் வேண்டாம்.

**<u>இனியும் உடுக்கை அடிக்கும் பூசாறியாக வாழ வேண்டும் என்று எண்ண வேண்டாம். அடுக்கடுக்காக அழகாகத் தத்துவங்களைக் கூறும் குருமார்களுள் ஒருவராக மாறுங்கள்</u>**.

8) நமது குருகுலத்தில் குருதேவரே அடிக்கடி வந்து குரு, குருக்கள், குருமார், பூசாறி எனும் நான்கு வகையான மறையவர்களை உருவாக்கவும்; 48 வகையான அருட்பட்டத்தவர்களை உருவாக்கவும்; ஏற்கனவே உள்ள சன்னிதானங்களுக்குக் கொள்கைத் தெளிவும், செயல்முறைப் பயிற்சியும் வழங்கவும்; ஓகாசனம், யோகாசனம், தவம், குண்டலினி, ... முதலியன பற்றி ஓரளவாவது அநுபவ அறிவு வழங்கவும்; துறவு பூண்டு வாழத் தயாராக இருப்பவர்களுக்கு மடப்பள்ளி வைத்துச் சமைத்துப் போட்டே தம்பிரான்களையும்,

தம்பிராட்டிகளையும் தயாரிக்கவும், ... குருகுலம் எல்லாவகையான வசதி வாய்ப்புக்களையும் பெற்றிருக்க வேண்டும்.

பதினெண்சித்தர் மடத்தின் கீழ் அறங்காவலர் குழு (Trust) என்ற முறையில் குருகுலம் பதிவு செய்யப்பட்டாக வேண்டும். அதில் நமது இயக்கத்தில் சேர்ந்து ஓரளவாவது பயிற்சியும், குருதேவரிடம் சில ஆண்டு அநுபவமும், குருதேவரின் முழுமையான நம்பிக்கையும் பெற்றவர்களால்தான் உறுப்பினராக முடியும்.

எக்காரணம் பற்றியும் தங்கள் ஊரார், வட்டாரத்தார் என்பதற்காக யாரையும் நிருவாகக் குழுவில் சேர்க்க முடியாது. இது ஓர் உலக நிறுவனம். இந்தியா முழுவதிலும் உள்ளவர்களில் சிலரும், வெளிநாடுகளில் உள்ளவர்களில் சிலரும், குறிப்பாகத் தமிழ்நாடு முழுதும் உள்ளவர்களில் சிலரும் இதில் இடம் பெற்ருக வேண்டும். குருகுலத்தைப் பொறுத்தவரை நீங்கள் அதில் இருப்பீர்கள். மற்றபடி தேர்ந்தெடுக்கப்படும் அனைவரும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் அம்மையப்பன்கள் திருவுளப்படிதான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதில் யாருடைய பரிந்துரையும் எடுபடாது. உலகியல் காரணமாக யாரையும் புறக்கணிப்பதோ, வலுக்கட்டாயமாகச் சேர்ப்பதோ நிகழாது.

9) வலையபட்டி பழனியப்பன் (சீரங்க பவனம், யாதவர் தெரு, வலையபட்டி Post, புதுக்கோட்டை-622411) அவர்கள் பற்றிக் கபாடபுரத்துக் கருவூரரின் பரிந்துரை வராமல் குருதேவர் தமது கருத்தை மாற்றிக் கொள்ள முடியாது. அவர் முதலில் புதுக்கோட்டை மாவட்டம் முழுதும் உள்ள எல்லாக் கோயில்களுக்கும் சென்று சன்னிதான உடையில் பூசாமொழி வாசகங்கள் முழுதும் கூறிப் பூசைகள் செய்து குருதேவர் பெயரில் அருட்சினை செய்து திருநீறு குங்குமம் அனுப்பட்டும். அவர் பூசை செய்த வட்டாரத்தில் ஒருசில மெய்ஞ்ஞானக்கொடியையாவது யார் வீட்டிலாவது ஏற்றட்டும். அவர் உருவாக்கிய திருக்கூட்டமும் அவருடன் சுற்றுலா வரட்டும்.

அவர் அடிக்கடி குருதேவருக்கு ரூ.3000/- காணிக்கையாகத் தருவது பற்றிப் பேசுகிறார்; முயற்சிக்கிறார்; அவர் தன்னுடைய வாழ்வில் நடுப்பகுதியிலிருந்துதான் கடும் உழைப்பினால் பணம் சம்பாதித்துள்ளார். எனவே, பணத்தை மிகப் பெரிதாக நினைக்கிறார். பணத்தால் குருதேவரை விலைக்கு வாங்க முடியும் என்றும் நினைக்கிறார்.

நமது குருதேவர், இம்மண்ணுலகிலேயே தோன்றிய முதல் அரச குலத்தின் வாரிசு என்பதையும்; பிறவியிலேயே ஒரு கோடீசுவரக் குடும்பத்தினைச் சேர்ந்தவர் என்பதையும்; பணத்தையே மதிக்காமல் நிருவாணமாகவும், அரைநிருவாணமாகவும், கடலோடிக் காடோடி வாழ்க்கை வாழ்ந்தவர் என்பதையும்; அவர் எப்பொழுது நினைத்தாலும் நினைக்கின்ற செல்வங்களையெல்லாம் உடனே ஈட்டிக் கொள்ள முடியும் என்பதையும்; **உலகில் அருட்செல்வம்தான் நிலையானது, அரியது, பெரியது, சீரியது, நேரியது, கிடைத்தற்கரியது, அனைத்திலும் உயரியது என்ற பேருண்மையை உணர்ந்தவர் நமது குருதேவர்** என்பதையும், ... மேற்படி வலையபட்டி உயர்திரு பழனியப்பன் அவர்கள் தெரியாதவராக, அறியாதவராக, புரியாதவராக இருக்கின்றார்.

எனவேதான், அவர் குருதேவரை நேரில் பார்த்துக் காலில் விழுந்து காணிக்கை செலுத்தி மீண்டும் அடியானாகச் செயல்பட விரும்புகிறார். அவர், அப்படி வலுக்கட்டாயமாகக் குருதேவர் மனம் புண்படும்படிச் செயல்பட்டால் அதுவே அவருடைய குற்றத்தை அதிகமாக்கிடும். எனவே, அவர் எதையும் யோசித்துப் பொறுப்பாகவும், பொறுமையாகவும், அருளுலகப் பழக்கப்படி குருவுளம் அறிந்து செயல்படுவதுதான் நல்லது. இதுபற்றி அவருக்குத் தேவையான விளக்கங்களை வழங்குங்கள். இந்தப் பகுதியை மட்டும் அல்லது தாங்கள் விரும்பினால் இந்த அஞ்சல் முழுமையையும் அவருக்குப் படித்துக் காட்டுங்கள்.

விரைந்து இந்த அஞ்சலுக்கு 1+2=3 நகல்கள் எழுதி முதல் நகல் குருதேவருக்கும், இரண்டாம் நகல் தென்மண்டல அ.வி.தி.

தலைவர் சித்தரடியான் ச.துரைராசன் அவர்களுக்கும், மூன்றும் நகலை வேம்படிதாளம் சீ.மணிக்கும் அனுப்புங்கள். இரண்டாம் நகலை மதுரையில் உள்ள அனைத்து அடியான்களையும் முடிந்தவரை ஒன்று கூட்டிப் படித்துக் காட்டியபின் நேரில் துரைராசன் அவர்களிடம் வழங்குங்கள். அதன்பின் கட்டாயமாக அடுத்தடுத்து நகல்கள் எழுதி; எழுத எழுதத் தலைமைப்பீடத்திற்கு அனுப்பிக் கொண்டே இருங்கள்.

10) தாங்கள் குருதேவரின் ஆதரவையோ, அன்பையோ இழந்து விடவில்லை என்பதற்கு இந்த நெடிய அஞ்சலே சாட்சியாக அமைந்திடும். இதையே ஒரு பட்டயமாகக் காத்திடுங்கள். குருதேவர் கையொப்பமிட்ட அஞ்சல் அனுப்பக் கூடிய நல்லநிலை விரைவில் உருவாகட்டும். குருதேவர் கையொப்பம் இல்லையே என்று வருந்த வேண்டாம். குருதேவரின் திருவாக்கின்படியே இளந்துறவி சுந்தரானந்தா தமது வலதுகைக் கட்டைவிரல் காயத்தையும் பொருட்படுத்தாது எழுதிய அஞ்சல் இது.

<u>குறிப்பு:-</u>

a) மறந்தும் கூட நமது குருதேவர் பிறருடைய புகார்களையோ அல்லது குறிப்புச் சொற்களையோ, செயல்களையோ அடிப்படையாகக் கொண்டு உங்கள் மீது நடவடிக்கை எடுத்ததாக நினைக்க வேண்டாம், பேசிட வேண்டாம். நமது குருதேவர் முக்காலமும் உணர்ந்தவர் என்பதையும்; அவரால் இருந்த இடத்தில் இருந்தபடியே எங்கு எது நடந்தாலும் அறிய முடியும் என்பதையும்; அவர் நினைத்தால் எவரும் வாய் திறந்து கூறாமல் அவருடைய நெஞ்சிலும், சிந்தையிலும் இருக்கக் கூடியவனவற்றை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும் என்பதையும் உணருங்கள், நம்புங்கள்.

b) நமது குருதேவர் எவருடைய மனதையோ அல்லது சிந்தையையோ நோகச் செய்துதான் எதையும் கற்பிக்க வேண்டும் என்று எண்ணுபவரல்ல; இதேபோல், பிறரிடத்தில் அவர் மீது

அன்பும், நம்பிக்கையும் தானுகக் கனிய வேண்டுமே தவிர வற்புறுத்தியோ, அச்சுறுத்தியோ கனியச் செய்ய வேண்டும் என்று கருதுபவரல்ல.

c) எவராக இருந்தாலும் தம்மை முழுமையாகச் சரணுகதித் தத்துவப்படி ஒப்புக்கொடுப்பவரைத்தான் குருதேவர் ஏற்றுக் கொள்வார். அவரிடம் எவ்வளவு காலம் பழகியவராஞலும் சரி; எத்தகைய அரிய உயரிய சித்திகளேப் பெற்றவராஞலும் சரி; அவர் மீது கொண்டிருக்கும் அன்பிலும், நம்பிக்கையிலும் ஊசிமுனேயளவாவது தடுமாற்றமோ, தயக்க மயக்கமோ, ஊசலாட்டமோ ஏற்படும் என்ருல் உடனடியாக அவர்களே முழுமையாகத் தம்மை விட்டு விலகியிருந்து நிதானத்துடனும், பொறுமையுடனும் சிந்தித்து மீண்டும் ஒரு நல்ல முடிவுக்கு வருவதற்கு வாய்ப்பளிக்கக் கூடியவரே நமது குருதேவர்.

இவற்றையெல்லாம் நினேயுங்கள். பிறரையும் நினேக்க வையுங்கள்.

**இளந்துறவி சுந்தரானந்தா,**
**அருள்மிகு பவானியம்மன் சன்னிதானம்.**

<u>தொடர்பு</u>:- தலேமைப்பீடச் செயலகம், 8 சண்முகம் சாலே, விசயலட்சுமி நகர், கொளத்தூர், சென்னே-600099.

<u>நகல் எழுதியது:-</u>

அன்பு / சித்தர் மகன், சித்தரடியார், சித்தர் பதிலி சோ.இரவீந்திரன், 10-6-88.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சோ. இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# இராசிபுரம் தேர்தல் களத்தில் இந்து மறுமலர்ச்சி இயக்க அடியானின் அனுபவம்

ஓம்
வாழ்க குருதேவர்! வளர்க நும் பணி!
மலர்க அருளாட்சி!
அண்டபேரண்ட அருட்பேரரசர் அவர்களே போற்றி! போற்றி!

1989ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 25ஆம் நாள் சனிக்கிழமை மேற்கு மண்டல, சேலம் மாவட்ட இராசிபுரம் சட்டமன்ற தொகுதித் தேர்தல் களத்தில் தமிழின மொழி மத விடுதலை இயக்க அறிமுக விழாவில் அவசர, அவசியமாக உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாமல் கலந்து கொண்டு ஆக்கமும், ஊக்கமும் தந்து சிறப்புச் செய்த "ஞானுச்சாரியார், இந்துமதத் தந்தை, அருளாட்சி நாயகம், நான்குயுக நாயகம், இராசிவட்ட நிறைவுடையார், குருமகா சன்னிதானம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், நிறை யக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், குவலய குருபீடம், கருமூலப் பண்டாரம், திருமூல ஆதீனம், தத்துவ நாயகம், இந்துமத ஆச்சாறியார், தமிழின ஆச்சாரியார், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர், பரபிறம்மம், எல்லாம் வல்ல சித்தர், எமது குருதேவர்" அவர்களுக்கும்,

குருதேவரின் பதிலியாகச் செயல்படும் பொதுச் செயலாளர் பெரிய. முத்தையா அவர்களுக்கும், பொறுப்பாளராகப் பணிபுரியும்

கவிக்குமார் அவர்களுக்கும், அனைத்துத் துறையிலும் துணிவுடன் செயல்படும் சண்முகம் அவர்களுக்கும், குருதேவரின் அருகிலேயே இருந்து செயல்படும் கண்மணி சீனு அவர்களுக்கும், மற்றும் தலைமைப்பீடத்தில் செவ்வனே செயல்படும் எல்லா சன்னிதானங்களுக்கும்,

குருதேவரின் ஆணையை சிரமேற் கொண்டு துணிவுடன் செயல்பட்ட மாவீரன் கங்காதரக் குமார் அவர்கள் குடும்பத்தார்க்கும், கடந்தப்பட்டி சன்னிதானங்களுக்கும், வேம்படிதாளம் சன்னிதானங்களுக்கும், அன்புத் தம்பி வெங்கடேசன் அவர்களுக்கும்,

சிறுமுகை பழ.கோபால் அவர்கள் குடும்பத்தார்க்கும், பலவகையான உதவிகளைச் செய்து பெரும் பொறுப்பேற்ற தவச்செல்வர் பன்னீர்செல்வம் அவர்களுக்கும், நாடறிந்த சோ. இரவீந்திரன் அவர்களுக்கும், அயராது உழைத்த வஞ்சிப்பட்டி இரவீந்திரன் அவர்களுக்கும், நாமக்கல் சன்னிதானம் அவர்களுக்கும், வெள்ளைப்பிள்ளையார் கோயில் கலைச்செல்வன் அவர்களுக்கும்,

மற்றும் தேர்தல் பணியில் ஈடுபட்ட எல்லா பதினெண்சித்தர் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கும் கிழக்கு மண்டல இ.ம.இ., அ.வி.தி., தமிழின மொழி மத விடுதலை இயக்கத்தினரின் சார்பில் மகிழ்வையும், அன்பையும், பாராட்டுதலையும் மிகப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

அனைவருக்கும் அடியேனின் நன்றியை உரித்தாக்குகிறேன். வணக்கம்!

**<u>கடந்த தேர்தலில் அடியேன் கண்ட அனுபவம் சில:-</u>**

(1) வேட்பாளர் கங்காதரக் குமார் விளம்பரத் தாள்களை கையில் ஏந்திக் கொண்டு, கண்ணெதிரே தென்பட்டவர்க்கும், வீடுகளின் வாயிலில் நின்று கூவி அழைத்து வருவோர்க்கும் கொடுத்து, வேட்பாளர் “தானே” என அறிமுகம் செய்து ஓட்டுக் கேட்டார். சுடலைச் சன்னிதானம் முத்தையா அவர்கள் திருநீறு குங்குமம்

தந்து, மந்திரித்து அருள் வழங்கிச் சென்றார். ஆண், பெண் இருபாலாரும் காலணிகளை கழற்றி விட்டு, பயபத்தியோடு திருநீறு குங்குமம் பெற்று, கண்ணில் ஒற்றி மகிழ்ந்தனர். மறந்தும் கூட ஒருவரும் மரியாதைக் குறைவாக நடந்து கொள்ளவில்லை. குடிபோதையில் இருந்தவனும் மதித்தான். பருவ இளைஞர்களும் கூட தன்னை மறந்து மரியாதையுடன் நடந்து கொண்டார்கள். வீட்டுக்கு ஒரு ஓட்டு போடுங்கள் என்றதும் போடுகிறேன் என்றேதான் சொன்னார்கள்.

ஆகவே, குறிப்பாக தமிழகத்தில் இராசிபுரம் தொகுதி மக்கள் தெய்வீகத்தில் பற்று உடையவர்களே என உறுதிப்படுத்தியது தெளிவாக விளங்கும். இது போன்ற பண்புடைய மக்களை வேறு எந்த மாவட்டங்களிலும் காண்பது அரிது. மேலும், உழைப்பாளர்கள் நிறைந்த பூமி இராசிபுரம் தொகுதி. அறிமுகமாவதற்கு தேர்ந்தெடுக்கப் பட்டது பலவகையிலும் பொருத்தமானதே. கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டதால் மிகப் பெரிய காரியமான தேர்தலை குறைந்த செலவில் சந்தித்தோம். 10 இலட்சம் ரூபாய்களை வாரி இறைத்தும் டெபாசிட் இழந்திருக்கின்றார்கள்.

(2) இராசிபுரம் தொகுதி மக்கள் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை நன்றாகத் தெரிந்து கொண்டார்கள். ஆனால், புரிந்து கொள்ளவில்லை. ஏன்? இ.ம.இ. சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடியது அல்ல. குறிப்பாக அடியேன் கூட இந்த சந்தர்ப்பத்தில்தான் ஓரளவு புரிந்து கொண்டேன். உலகியல், கலை, இலக்கியம், அரசியல், பொருளாதாரம், அருளியல், ... அடக்கி ஆளும் அருகதை இவை அனைத்தும் நிரம்பிய அறிவுக் கடலாக, ஐந்தொழில் வல்ல சிவநிலை கண்கூடாகக் கண்டேன்.

சன்னிதானப் பட்டம் கொடுத்து வழிமுறைகளை சொல்லி, வழிநடத்தியும்; எண்ணங்களை அலைபாய விட்டு, சன்னிதானத்துக்குரிய

சத்தி, சித்திகளைப் பெருமல், பல ஆண்டுகளாகப் பெயரளவில் இயங்குகின்றேன். ஐயா அவர்கள் இந்நிலையில் என்ன பாடுபட்டிருக்கின்ருர்களோ? ஒரு ஆதரவும் இன்றி ஐயா அவர்கள் கவசமாக இருக்கிருர்கள். தைரியமாகச் செயல்படலாம் நமக்கென்ன குறை.

சாதாரண மனிதர்கள் புரிந்து செயல்பட வேண்டுமென்ருல், மாவட்டத்துக்கு ஒரு முத்தையாவாவது உருவாகிச் செயல்பட வேண்டும். தேர்தல் முடிவில் கிடைத்துள்ள வாக்குகளில் பெரும்பகுதி இராசிபுரம் நகரப் பகுதியில் கிடைத்தவையே. வேட்பாளரின் சாதிக்காரர் போட்ட வாக்குகள் இல்லை. 17-1-89 அன்று மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் குருதேவர் அவர்கள், சுடலை சன்னிதானம், சோ.இரவீந்திரன் ஆகியோரின் சொற்பொழிவுகள் மக்கள் மனதில் இடம் பெற்றன. அதனுல் அதிக வாக்குகள் கிடைத்தன.

(3) கங்காதரக் குமார் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது மிகமிகப் பொருத்தம். எப்படி? ஏன்? கங்காதரக் குமார் அவர்கள் அன்பு, பணிவு, அடக்கம், ஆர்வம், உழைப்பு, நுணுக்கம், கவர்ச்சி, அனைவரையும் மதித்தல் ஆகிய பண்புகள் நிறைந்தவர். கங்காதரக் குமார் அவர்களின் குடும்பத்தில் தாய், தந்தை, அண்ணன்மார், தம்பியர், அண்ணியார் அனைவரும் ஒரேமுகமாக செயலாற்றினர். அனைவரும் இளஞ்சிருர்களைப் போலவே ஓடியாடி பணிபுரிந்தனர். ஒருவருக்கொருவர் கடிந்து கொள்ளவில்லை. விவகாரம் ஏற்படவில்லை. செயலாற்றிய தொண்டர்கள் யாரும் மனம் நோகவில்லை. குருவாணையைப் போற்றி குருவே எல்லாம் என்பதை உணர்ந்து செயலாற்றினர்.

(4) அருள்வாக்குச் சொல்லி, மந்திரித்து, நலம் விளைவித்து என்னென்ன புரட்சி செய்தாலும் நன்றி உணர்வு நீங்கிய நமது சமுதாயத்தை மாற்றுவது சுலபமா என்ன? உதாரணம் - வெண்ணந்தூர், அலவாய்ப்பட்டி, வெள்ளைப் பிள்ளையார் கோயில், சிங்களாந்தபுரம்

ஆகிய இடங்களில் இயக்கத்தின் உழைப்பு என்ன? அதற்கு அங்கே கிடைத்துள்ள வாக்குகள் எத்தனை? மிகச் சிலவே. எந்தவிதமான அருளியல் உணர்வும் நம்மிடமிருந்து பெருத இராசிபுர நகர வாக்குகள் அதிகமே.

அருளுலக மாணவர்கள் தேர்தல் பணி செய்கின்றனர்; அவர்கள் ஏமாந்துவிடக் கூடாது என்று அந்தந்த கிராமதெய்வங்கள் வந்து ஒவ்வொரு வாக்கு போட்டது போல அத்தனூர் போன்ற கிராமங்களில் சில வாக்குகள், சீராப்பள்ளி, நாமகிரிப் பேட்டை, புதுப்பாளையம் ஆகிய ஊர்களில் சில வாக்குகள் கிடைத்தன. கிராமங்கள் தோறும் குருதேவரின் கருத்துரைகளில் பல ஒலிக்கப்பட வேண்டும்.

(5) தேர்தல் பணியில் ஈடுபட போதுமான தொண்டர்கள் இல்லாத காரணத்தால் சில பகுதிகள் விடுபட்டன. போதிய வாகன வசதிகள் இல்லாத காரணத்தால் வாக்காளர்களை மீண்டும், மீண்டும் சந்தித்து குழப்பித் தெளிய வைக்க வாய்ப்பு கிடைக்கவில்லை.

மேற்கண்ட வசதிகள் இருந்தால் முழு வெற்றி கிடைத்திருக்குமா என்றால் அதுவும் இல்லை. முதலில் நாடெங்கும் நமது குருதேவர் உலக மகா மேதை என்பதை உணர வேண்டும். நமது இயக்கம் எப்படி? ஏன்? அவசியமானது என்று உணர வேண்டும். குடவோலை முறைப்படி அரசு அமைய வேண்டுமென்றால் விளம்பர, விமர்சனம் முதல் இடம் பெறுகிறது.

மேற்கூறிய அனுபவங்களைப் பெறும் வாய்ப்பினை நமது குருதேவர், எல்லாம் வல்ல, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள் தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தையை எழுப்பி பாலூட்டுவது போன்று சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வாய்ப்பினைத் தந்து, படிப்பினை தந்து, ஊக்கப்படுத்தி, உயர்வு தந்து பாதுகாத்தருளுவது எம் முன்னோர் செய்த தவப்பயன்.

அடியேனுக்கு அமுத மழையாகப் பொழிகிறது என்று சில துளிகளை தெளித்து இவற்றின்கண் காணும் பிழைகட்கு மன்னிப்பு விடுத்து, மகிழ்வுடன் கண்ணை இமை காப்பது போல் காத்திடவும், *‘*வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும்பென்ன*’ நீங்கா இடம் தந்தருள பணிவுடன் வேண்டும்,

**அன்பு**

**சித்தரடியான்,**

**A.P.திருஞானசம்பந்தம்.**

குருவே எல்லாம்! ஓம் திருச்சிற்றம்பலம்!

**//உண்மை நகல்//**
**//மூலம்: சித்தரடியான் திரு திருஞானசம்பந்தம் (திருவையாறு) அவர்களின் கையெழுத்தில் இருந்த அஞ்சலின் நகல்.//**

***தொகுப்பு ஆசிரியர் தரும் பின்குறிப்பு:-**

*பெரியபுராணத்தில் கண்ணப்ப நாயனர் புராணத்தில் வரும் 765ஆம் பாடலில் காணப்படும் உவமையையே சித்தரடியான் திருஞானசம்பந்தம் அவர்கள் பயன்படுத்தி உள்ளார். இது வரும் பாடல் கீழே தரப்படுகின்றது.:*

*“அங்கிவர் மலையில் தேவர் தம்மைக் கண்டு அணைத்துக் கொண்டு*
***வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும்பு என்ன** நீங்கான்*
*இங்கும் அத் தேவர் தின்ன இறைச்சி கொண்டு ஏகப் போந்தான்*
*நம்குலத் தலைமை விட்டான் நலப்பட்டான் தேவர்க்கு என்றான்”*

**//உண்மை நகல்//**

அகிலாண்டபுரம்,
30-3-89.

ஓம் குருவே போற்றி! ஓம் குரு வாழ்க! ஓம் குருவே துணை! ஓம் தாத்தா அண்டபேரண்ட அருட்பேரரசர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களே போற்றி! போற்றி!

# ஒரு முயற்சி! அதில் வெற்றி! அதனால் மகிழ்ச்சி!....?!!!

17-6-88 அன்று நடந்த பதினெண்சித்தர் பயிற்சிப் பள்ளியின் திருவரங்க இரண்டாவது பயிற்சி முகாமில் நடந்த சிறப்புப் பூசையில் பதினெண்சித்தர் நெறிப் பள்ளியின் தலைவர், இ.ம.இ., அ.வி.தி., தமிழின மொழி மத விடுதலை இயக்கப் பாரம்பரிய தலைவரும், இன்றைய குருமகாசன்னிதானம், எல்லாம் வல்ல சித்தர், பரப்பிறம்மம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்களும், எனது குருதேவரும், எனது அண்ணனும் ஆகிய அருட்கொடை வள்ளலின் கருணையால் அடியேனுக்கு திருச்சபையில் சில பாக்களால் ஆத்தாக்களைப் பாடும் வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அருளாட்சித் தலைவி வீரமாகாளி, சமயபுரம் மாரியம்மன், காமாட்சியம்மன் ஆகியோரைப் பாடினேன். உடனிருந்த அனைத்து சன்னிதானங்களும் மகிழ்ந்தனர்.

சேலம் மாவட்டம் இராசிபுரம் ஐந்தொழில் வல்ல சிவபெருமான் சன்னிதானம் வ.பன்னீர்செல்வம் மனைவியும், அடியேன் சகோதரியுமான கசுத்தூரி அடியேனைச் சந்தித்து தனக்கு உடல்நலத்தில் பாதிப்புகள் இருப்பது பல மாதங்கள் ஆகிறது. நிவாரணம் வேண்டுமென்றும், தனக்கு இதற்கு முன் நான்கு பெண் மக்கள் இருப்பதாகவும்,

ஆண் வாரிசு வேண்டுமென்றும் கண்களில் நீர் மல்க கூற அடியேன், “கருணைக் கடலான நமது குருதேவர் அருகிருக்க, நாம் செய்யும் அனைத்து நிகழ்ச்சியும் குருவருளால்தான் நடக்கிறது. இது புரியாமல் அடியேனிடம் சொன்னால் என்ன செய்ய இயலும். குருதேவர் ஆணையிட்டால் முயற்சி செய்கிறேன்” என்று சொன்னேன்.

சகோதரி கசுத்தூரி கணவர் துணை கொண்டு, ஐயா அவர்களிடம் வேண்டி, மன்றாடி குருவாணை பெற்று, அடியேனை அழைப்பதாகச் சொன்னார்கள். உடன் சென்று வணங்கினேன். ஐயா அவர்கள் அடியேனை அழைத்து, “ஏண்டா தம்பி, இவளுக்கு என்ன மருந்து கொடுக்கத் தெரியும்” எனக் கேட்டார்கள். “குருவின் மேல் பத்தி கொண்டு மண்ணை அள்ளிக் கொடுப்பேன். அது மருந்தாகச் செயல்பட்டு நலம் கிடைக்கும்” என்றேன். ஐயா அவர்கள் சிரித்துக் கொண்டார்களே தவிர வேறொன்றும் சொல்ல வில்லை. விடை கொடுத்தார்கள்.

பிறகு பன்னீர்செல்வம் தம்பதிகள் என்ன மருந்து எந்த முறையில் சாப்பிட வேண்டும் என்று கேட்டார்கள். பச்சிலையும், முறைகளும் எழுதித் தந்தேன். இவற்றைக் கொண்டு மருத்துவப் பயிற்சி உண்டோ என்று எண்ண வேண்டாம். உறுதியாக அடியேனுக்கு மருத்துவம் தெரியாது. அடியேன் கூறியபடி பச்சிலை சாப்பிட்டு, பூசைகள் செய்வதாக அஞ்சல் வரைந்தார்கள்.

அடியேன் எந்த பிரதி பலனும் கருதாமல் நமது சன்னிதானங்களுக்கு நாம் உதவுவது கடமையாகவே எண்ணி எங்கள் ஊரான காருகுடியில் எழுந்தருளியிருக்கும் ஆத்தாள் குளுந்தாளை சொந்தச் செலவில் 7 செவ்வாய்க்கிழமை இரவு 11 மணி முதல் விடியும் வரை காத்திருந்து பூசைகள் செய்தேன். ஆத்தாள் குளுந்தாள் தன் மகன் உயர வேண்டும் என்றும், அது தனக்கு உயர்வாக எண்ணி, “உன் பூசையில் மகிழ்ந்தேன்; உன் வேண்டுகோளின் படி அண்ணன் முனீசுவரன் பன்னீர்செல்வத்துக்கு ஆண் வாரிசு வழங்க தங்கை

சிறுவாச்சூர் மதுர காளி துணையுடன் அனுப்பியிருக்கிறேன். காலத்தில் பலன் கிடைக்கும்" என்று வாக்களித்தாள். அடியேன் பாரம் குறைந்ததாகவும், மேற்கொண்ட பணி நிறைவேறும் என்ற நம்பிக்கையில் வாளாயிருந்து விட்டேன். இக்கட்டுரையில் காண்பவை அனைத்தும் கனவல்ல, நடந்தவைதான் என அருளுலக அனுபவம் குறைந்தவர்கள் உணர்ந்து தெளிக.

1989 சனவரி திங்கள் குருவாணைப்படி தேர்தல் பணிக்கு இராசிபுரம் சென்றேன். நண்பர் பன்னீர்செல்வத்துடன் அவர்கள் வீட்டிற்கு சென்றேன். அடியேன் வருகை கண்டு கசுத்தூரி தானுக வந்து வா என்று அழைக்கவில்லை. தன் கணவரின் வற்புறுத்தலினுல் வந்து வரவேற்ருர்கள். பெண் புத்தி பின் புத்தி என்பதை மெய்ப்பித்தார்கள். அதற்கு அவர்களுக்கு நன்றி கூற கடமைப் பட்டவனுகிறேன். அவர்கள் மனநிலை அது சமயம் எப்படியோ? அறியேன். பிறகு பன்னீர்செல்வம் அவர்களின் மக்களை அழைத்து வாழ்த்தினேன். கடைசிப் பெண்ணுன விசியை தூக்கி வைத்திருந்து வாழ்த்தி வந்தேன். அது சமயம் கசுத்தூரிக்கு மதில் பூனை போல் குருதேவரின் மேல் முழுமையான நம்பிக்கை இல்லை என்பதை உணர்ந்து நாம் இப்படி! உலக மக்கள் அப்படி! என்று எண்ணி அமைதி கொண்டேன்.

இன்று 30-3-89 நண்பர் பன்னீர்செல்வம் கடிதம் எழுதியுள்ளார். அது விவரம்:-

*அன்புள்ள,*

*அருள்மிகு அம்பகரத்தூர் பத்திரகாளி சன்னிதானம் அவர்களுக்கு இராசிபுரம் ஐந்தொழில் வல்ல சிவபெருமான் சன்னிதானம் மிகுந்த வணக்கத்துடன் எழுதிக் கொண்டது. நலம், நலமறிய அவா.*

*நமது குருதேவர் அருளால் ஞாயிற்றுக்கிழமை 19-3-89 பகல் 12.37 மணிக்கு எனது துணைவியாருக்கு ஆண் குழந்தை*

*பிறந்துள்ளான் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் குடும்பக் கட்டுப்பாடு ஆபரேசன் (21-3-89) செய்து விட்டேன். நேற்றுதான் மருத்துவ மனையிலிருந்து கூட்டி வந்து உடன் அவர்கள் அம்மா வீட்டிற்கு அனுப்பி வைத்துள்ளேன். மற்றும் 6-3-89 ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அச்சகத்தையும் துவக்கியுள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். விரைவில் எனது காணிக்கையும் செலுத்தி விடுகிறேன். நேரிலும் வருகிறேன். இது விவரம் நம் சித்தரடியான்களுக்கும், சங்கரனுக்கும் தெரியப்படுத்த வேண்டுகிறேன். மற்றபடி யாவரும் நலனே.*

*தங்கள் பணிவுள்ள,*
*வ.பன்னீர்செல்வம்.*

*ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அச்சகம்,*
*4-B, சேலம் மெயின் ரோடு,*
*இராசிபுரம், சேலம் மாவட்டம்.*

சித்தர் கருவூரரின் விளையாடல்கள் பரவட்டும்! தரணி புகழட்டும்! திக்கெட்டும் புகழ் ஒலிக்கட்டும்! வாழ்க குருதேவர்! வளர்க நம் பணி! மலர்க அருளாட்சி!

இவ்வனுபவத்தின் மூலம் நமது சன்னிதானங்களுக்கு நினைவூட்டும் வகையில் சில சொற்கள் என்னவெனில், நம் குருதேவர் அடியேனை, “நீ இந்த உலகில் எந்த இடத்தில் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் செய்! அது வெற்றி பெறும்!” என வாழ்த்தியுள்ளார்கள். இது போன்ற செயல்களுக்கு முன் பயிற்சி ஏதாவது உண்டா? என்றால் அதுவும் இல்லை. இல்லையென்றால் எப்படி நடக்கிறது? நமக்குள் குருதேவர் இருக்கிறார். அவ்வப்போது தேவையான வழி முறைகளைச் சொல்லி, முயற்சிகளைத் தூண்டி,

அனைத்துக்கும் காரண, காரிய, கர்த்தாவாகவும் செயலாற்றுவதை உணர்கிறேன்.

குருதேவர் பல ஏடுகளில் எழுதியுள்ளார்கள், "யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்!" என்று. அது போன்று அடியேனுக்கு இது போன்ற நிகழ்ச்சிகளில் பங்கு தந்து, ஊக்குவித்து, சிறப்பு வழங்குவது மிக்க மகிழ்ச்சி. இவற்றிற்கு மூல காரணம் எம் முன்னோர் செய்த தவப் பயனே!

நண்பர் பன்னீர்செல்வம் தாயும், சேயும், பெண்மக்கள், தேன்மொழி, மீரா (எ) சாந்தி, மலர்விழி, விசி ஆகியோரை நமது ஐயா அவர்களே ஆத்தாக்களும், தாத்தாக்களும், குருவும் திருவுமாய், குருவே எல்லாமாய் நின்று பாதுகாத்து காப்பாற்றி அருள்புரிய வேண்டுமென்று வேண்டி தாயையும் சேயையும் இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

**அன்பு சித்தரடியான்**
**A.P.திருஞானசம்பந்தம்,**
**30-3-89.**

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!
வாழ்க தமிழ்!
மலர்க அருளாட்சி!

**//உண்மை நகல்//**

நகல் நல்குபவர்:-

அருள்மிகு தலைமைப்பீடத் திருவோலை நாயகம்,
கபாலீசுவரி சன்னிதானம்,
சித்தரடியார் சீ.மணி.
2-4-1989.

**//இதன் மூலம்: சித்தரடியார் திரு சீ. மணி அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

ஓம்

# வாழ்த்துத் திருவோலை!

தலைமைப்பீடம்,
22-4-1989.

திரு இராம. தியாகராசன் (இராம் ஸ்டீல் ரோலிங் மில், பிச்சாம்பாளையம் சாலை, பேரூர் செட்டிப்பாளையம், கோயம்புத்தூர்-641010) அவர்கள் சமூகத்திற்கு,

ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் ஆணைப்படி தலைமைப்பீடம் விடுக்கும் வாழ்த்துத் திருவோலை.

1) அனைத்தும் குருவின் செயலே! தாத்தாக்கள் ஆத்தாக்கள், அம்மையப்பன்கள் திருவருளே!

2) பொருளுலக அருளுலகப் பாதுகாப்பிற்காக இயக்க நண்பர் அருள்மிகு சித்தரடியான் திரு ச.விசுவநாதன் (1/28, வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, மாவட்ட வன அலுவலர் வளாகம், ரேசுகோர்சு, கோவை-641018) அவர்கள் மூலமாக அருட்கொடை வள்ளல் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் அ.வி.தி. செயல்வீரர்களான 1. மதுரை ஆலவாய் மாமூதூர் சுடலைப் பத்திரகாளி சன்னிதானம் திரு பெரி. முத்தையா, 2. அருள்மிகு மருதமலை முருகன் சன்னிதானம் திரு பழ. கோபால் (6/504, திருவள்ளுவர் நகர், சிறுமுகை, கோவை - 641302), 3. அருள்மிகு பழனியாண்டவர் சன்னிதானம் திரு இர. இராமசாமி (6/447, திருவள்ளுவர் நகர், சிறுமுகை, கோவை - 641302) ஆகியோரை வரவழைத்துப் பூசைகளைச் செய்து நல்ல பயன் அடைந்துள்ள தோழர் திரு இராம. தியாகராசன் அவர்களே! தங்களின் 17-4-89ஆம் தேதியிட்ட அஞ்சல், 22-4-89ஆம் தேதியாகிய இன்று மாலையில் கிடைத்தது. வழக்கம்போல் குருதேவருக்கு நள்ளிரவில் படித்துக் காட்டப்பட்டது.

தங்களைப் போன்று தமிழின சமுதாயத்தில் பலரும் தமிழின குருபீடமாகவும், ஞானாசாரியாராகவும், தலைவராகவும் விளங்கும் குருதேவரின் அடியான்கள் மூலம் தங்களுக்குள்ள குறைகளைப் போக்கி நிறைவுகளை உண்டாக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான் குருதேவரின் செயல்திட்டம். அது இப்பொழுது உங்களுக்கு நல்ல பயனை அளித்து இருக்கிறது. உங்களுக்குப் போல் பலருக்கும் பயனை அளிக்க வேண்டும். எனவே, நீங்கள், தமிழர்களுக்கே உரிய, "**<u>நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்</u>**" என்ற தத்துவப்படி குருதேவரையும், பதினெண்சித்தர் மடத்தையும்; அருட்பணி விரிவாக்கத் திட்டம், இந்து மறுமலர்ச்சி இயக்கம், தமிழின மொழி மத விடுதலை இயக்கம், ... முதலியவைகளையும் செயலாக்கி வரும் பல்லாயிரக்கணக்கான அருளாற்றல் மிக்க சித்தரடியான்களைப் பலருக்கும் அறிமுகப்படுத்தி எல்லோருமே அருள்நலம் பெற்று உய்யச் செய்ய வேண்டும்.

3) பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம் வெளியிட்டு இருக்கக் கூடிய சுமார் ரூ.200/- மதிப்புள்ள வெளியீடுகளை வாங்கி நீங்களும் படித்து, பிறரையும் படிக்கச் செய்து குருதேவரின் கொள்கைகள், குறிக்கோள்கள், செயல்திட்டங்கள் முதலியவை எங்கும் பரவிட, எல்லோருக்கும் பயன்பட்டிடச் செய்யுங்கள். அதற்காக குருதேவரை உங்கள் வட்டாரத்திற்கு வரவழைத்து; கல்வி நிலையங்கள், வழிபாட்டு நிலையங்கள், திருச்சபைகள், ... முதலிய இடங்களிலும், பொதுமன்றங்களிலும் அருளுரைகள் வழங்கவும், சொற்பொழிவுகள் ஆற்றவும் ஏற்பாடு செய்யுங்கள்.

நமது குருதேவர் ஒருவர்தான் மக்களோடு மக்களாகக் கலந்து பழகி; அருளை அநுபவப் பொருளாக வழங்கி; ஆர்வமுடையவர்களை அருளாளர்களாகவே மாற்றி எதையும் விஞ்ஞானச் சூழலிலும், பகுத்தறிவுப் போக்கிலும் விமர்சனம் செய்து எவருடைய எத்தகைய வினவாக இருந்தாலும் அதற்குப் பதில் கூறி அருளாட்சி நாயகமாகச்

செயல்பட்டுக் கொண்டு வருகிறார். எனவே, இவரை சந்திக்க முயலுங்கள். பலரையும் இவரைச் சந்திக்கச் செய்யுங்கள். அப்பொழுதுதான் நமது நாட்டில் அக இருளையும், புற இருளையும் அகற்றக் கூடிய உணர்வுப் புரட்சி, எண்ணப் புரட்சி, சிந்தனைப் புரட்சி, கருத்துப் புரட்சி, பண்பாட்டுப் புரட்சி, ... முதலியவை தோன்றிட முடியும். எனவே, நமது தாயகம் மறுமலர்ச்சியும், ஆட்சி மீட்சியும் அடைந்திட நமது அருளாட்சி நாயகத்தைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுங்கள்.

4) உங்களுக்காக செய்யப்பட்ட அனைத்துப் பூசைகளும் மாபெரும் வெற்றியைப் பெற்று இருக்கின்றன. இவை மென்மேலும் வளர, வளப்பட வேண்டுமானால் சிறுமுகை, திருவள்ளுவர் நகரில் திரு பழ.கோபால் இல்லத்தில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் **யக்ஞ சாலை** பூசைக்கு (ஞாயிறு தோறும் பகல் 2 முதல் 5 வரை) தவறாது கலந்து கொள்ளுங்கள். மேலும், மேற்கு மண்டல மாதண்ட நாயகம் திரு பழ.கோபால், கோவை மாவட்ட அ.வி.தி. அமைப்பாளர் திரு இர.இராமசாமி இருவரையும் துணையாக கொண்டு இயக்கம் வளர்க்கப் பாடுபடுங்கள்.

அருள்மிகு சுடலைச் சன்னிதானம் போன்று பல்வேறு வகைப்பட்ட சன்னிதானங்கள் பேராற்றலுடன் பொதுத் தொண்டாற்றிக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் மூலமாகவும் நன்மையடையுங்கள். பிறரையும் நன்மையடையச் செய்யுங்கள். அதற்காக, 1. தென்மண்டல அ.வி.தி. தலைவர் திரு ச.துரைராசன் (115, புட்டுத்தோப்பு ரோடு, மதுரை-625010) அவர்களுடனும், 2. மேற்கு மண்டல இ.ம.இ. செயலாளர் திரு இரா.வெங்கடேசன் M.A., B.L., (2/69, மெயின்ரோடு, வேம்படிதாளம்-637504) அவர்களுடனும், 3. தலைமைப்பீடத்துடனும் தொடர்பு கொள்ளுங்கள்.

5) நீங்கள் விரும்பினால் கோவை மாவட்டத்திலோ அல்லது மேற்கு மண்டலம் முழுவதுமோ, இந்து மறுமலர்ச்சி இயக்கம்

அல்லது அருட்பணி விரிவாக்கத் திட்டம் அல்லது தமிழின மொழி மத விடுதலை இயக்கம் என்ற மூன்றில் ஏதாவது ஒரு அமைப்பில் சிறப்பான பங்கு வகித்து தலைமையேற்று நடத்தலாம். அது பெரிய யாகங்கள், தவங்கள் செய்ததிற்குச் சமமாகும்.

## சிறப்புக் குறிப்பு:-

a) தங்களால் நிகழ்த்தப்பட்ட பூசைகள் அனைத்தும் மிகப்பெரிய வெற்றியை பெற்றிருப்பதாலும், தாங்கள் தமிழின மொழி மதம் மலர்ச்சிக்காகவும், மறுமலர்ச்சிக்காகவும், வளர்ச்சிக்காகவும், வளவளர்ச்சிக்காகவும், ஆட்சி மீட்சிக்காகவும் பயன்படக் கூடிய ஒரு அருளாளராக இருப்பதாலும் குருதேவர் உங்களுக்கு தேவையான அருளூறு பூசனைப் பொருள்களும், குருதேவருடைய ரூ.18/- மதிப்புள்ள card size கலர் புகைப்படங்களையும், ரூ.11¼ மதிப்புள்ள card size வெள்ளை கறுப்பு புகைப்படங்களையும், மற்றும் ரூ.5/- மதிப்புடைய சிறிய புகைப்படங்களையும் அனுப்புமாறு ஆணையிட்டு இருக்கின்றார். அதன்படியே தங்களுக்கு குருதேவரின் திருவுருவப் படங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. இப் புகைப்படங்களை தங்களுக்குச் சொந்தமான அனைத்து இடங்களிலும் ஆங்காங்கே மாட்டி வையுங்கள். உரிய பாதுகாப்புக்கள் கிடைக்கும். கவலை வேண்டாம்.

b) இத்துடன் தங்களுக்கு அனுப்பியுள்ள அருளூறு பூசனைப் பொருளான திருநீறு, குங்குமம், மஞ்சள் ஆகிய மூன்றையும் தனித்தனியாக மூன்று (எவர்சில்வர் கிண்ணத்தில்) ஏதாவது ஒரு உலோகப் பாத்திரத்தில் போட்டுக் கொள்ளுங்கள். அவற்றோடு விலைக்கு வாங்கிய திருநீறு, குங்குமம், மஞ்சளையும் போட்டு வைத்துக் கொள்ளுங்கள். இவற்றிற்கு நாற்பத்தெட்டு நாட்களுக்கு ஆற்றல் உண்டு. இவற்றில் சிறிதளவு எடுத்துக் கொண்டு மூன்றையும் கலந்து ஏதாவது ஒரு மண்கலயத்தில் நீரில் கரைத்து, வேப்பிலையால்

தொட்டு எல்லா இடங்களிலும் தெளித்தால் தீமைகள் அகல்வதோடு நன்மைகள் விளையும்.

c) குருதேவரின் படங்களில் உள்ள சக்கரங்கள் பொதுவாக உள்ள ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் உடனுக்குடன் தற்காலிகமான பாதுகாப்புக்கள் தருவதற்காக தரப்பட்டவை. (டார்ச்சு லைட் போன்று). பொருளாதார வசதி வாய்ப்புக்கள் உள்ளவர்கள் ரூ.243/- முதல் ரூ.1359/- வரை செலவாகக் கூடிய அதாவது விலை மதிப்புள்ள சக்கரங்களை பதினெண்சித்தர் மடத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். அவை தேவையான போது தயாரித்துத் தரப்படும். எனவேதான் மேற்குறிப்பிட்டவை உடனடியாகத் தங்களுக்கு வழங்கப்படுகிறது.

d) **இம்மண்ணுலகில் பதினெண்சித்தர் பீடாதிபதிகளாகத் தோன்றுபவர்கள்தான் தங்கள் ஓவியத்துடனோ அல்லது சிலைகளுடனோ தாங்கள் தரக்கூடிய ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீக, ... இயந்திரங்களும், சக்கரங்களும் இணைத்துத் தரமுடியும், தரக்கூடிய பழக்கம் உண்டு**. அதாவது, சாதாரண மந்திரவாதிகள் அல்லது அருளாளர்கள் அல்லது பூசாறிகள் அல்லது குறிகாரர்கள் அல்லது சித்து விளையாடல்காரர்கள் அல்லது ஒரு சில சித்தி பெற்றவர்கள் அருளுலகத்தில் உள்ள அல்லா, அண்ணு, அத்தா, அப்பன், அம்மை, ஆத்தாக்கள், இறை, தெய்வம், கடவுள், தேவர், தேவதை, ... எனப்படும் உயர்ந்தவர்களையோ அல்லது சாதாரணமான பேய், பிசாசு, பில்லி, சூனியம், ஏவல், காற்று, கழிப்பு, வைப்பு, மருந்து என்று அருளுலகில் பதினெண்சித்தர்கள் உருவாக்கிய ஒன்பது வகையான கலைகளை செய்யக் கூடியவர்களையோ; எதற்கும் கட்டுப்படாத உருவங்கள், அருவங்கள், அருவுருவங்கள், உருவருவங்கள், கருப்புக்கள், ... முதலியவைகளையோ சந்திக்கத் தயங்கியும், மயங்கியும், அஞ்சியுமே தாங்கள் தரக்கூடிய சக்கரங்களையும், தகடுகளையும் மொட்டைக்

கடிதங்களைப் போல் கொடுத்து விடுவார்களே தவிர தங்களின் படத்தையோ, உருவத்தையோ இணைக்க மாட்டார்கள்.

அதாவது, உலகியலில் பலர் தங்களுடைய கருத்துக்களை மொட்டைக் கடிதங்களாகத்தான் தாங்கள் கற்றுக் கொள்ளாமல் வெளியிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஏனென்றால் எவருமே முழுமையான தன்னம்பிக்கையோடும், ஈக உணர்வோடும் (ஈகம் = தியாகம்), அஞ்சாத துணிவோடும், எந்த சிக்கலையும் சந்தித்து பொதுத் தொண்டாற்றும் ஆர்வத்தோடு செயல்படுவதில்லை! செயல்படுவதில்லை!! செயல்படுவதில்லை!!! செயல்படுவதேயில்லை!!!!

இதனால்தான், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார், அண்டபேரண்ட அருட்பேரரசு அவர்கள் தமிழின மொழி மத விடுதலைக்காகவே இரு கைகளிலும் வாளெடுத்து சுழற்றி ஒரு மாபெரும் அருட்பேரரசையே (கி.பி. 785 - 1279 பிற்காலச் சோழப் பேரரசு) உருவாக்கியும் கூட நமது தாயக மக்கள் இன்னும் விடுதலை பெறவில்லை. போதுமான அளவு தன்னம்பிக்கை பெறவில்லை. தேவையான அளவு தன்மான உணர்வு பெறவில்லை. தேவையான அளவு மொழிப்பற்றும், மொழிப் பெருமையுணர்வும், மொழி உரிமையுணர்வும், மொழி விடுதலை உணர்வும் பெறவில்லை. தேவையான இனப்பற்றும், இன ஒற்றுமை உணர்வும், இன ஒருமைப்பாட்டு உணர்வும், இன விடுதலை உணர்வும், இனப் பெருமித உணர்வும், இன உரிமையுணர்வும், இனப் பாரம்பரிய உணர்வும் பெறவில்லை.

இவற்றிற்கெல்லாம் மேலாக <u>நமது தாயக மக்களான தமிழர்கள் தங்களுடைய மதம்தான் இந்துமதம்; இதுதான் அண்டபேரண்டம் முழுவதும் பரவியிருக்கக் கூடிய ஒரே மதம்; நம்முடைய மதம்தான் இம்மண்ணுலகில் தோன்றிய முதல் மதம், மூல மதம், அனைத்து மதங்களுக்கும் தாயாக இருக்கின்ற மதம்; இந்த இந்துமதத்தின்</u>

<u>அருளுலக ஆட்சிமொழியான தமிழ்மொழிதான் அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியாக இருந்து வருகின்றது;</u> இந்தத் தமிழ்மொழியில்தான் யார் வேண்டுமானாலும் பத்தி, சத்தி, சித்தி, முத்திகளைப் பெறலாம் என்ற நிலை இருக்கின்றது. இந்த மொழியில்தான் அண்டபேரண்டங்களிலிருந்து முழுமுதல் பரம்பொருளான சிவபெருமான் அறுபத்து நான்கு முறை நேரில் வந்து பேசி திருவிளையாடல் புரிந்து இருக்கின்றார். இந்த மொழியில்தான் 63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும், மௌனக் குருக்கள், பட்டினத்தார்கள், தாயுமானவர், அருணகிரியார், இராமலிங்க அடிகளார், ... முதலிய அருளாளர்கள் தோன்றித் தோன்றி வாழையடி வாழையாக அருளூறு பத்திப் பாடல்களை இயற்றி வருகிறார்கள். இந்த மொழியில்தான் பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும், 48 வகைப்பட்ட சித்தர்களும், 48 வகைப்பட்ட வழிபடு நிலையினர்களும், 48 வகைப்பட்ட வழிபாட்டு நிலையங்கள், 48 வகைப்பட்ட அருளாளர்கள், 48 வகைப்பட்ட கருவறைகள், 48 வகைப்பட்ட வெட்டவெளிக் கருவறைகள், ... முதலிய அருட் சாதனங்களும் காலங்கள் தோறும் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. ... இப்படி யெல்லாம் பெருமைகள் இருந்தும் நமது தமிழர்கள் நமது தெய்வீக அமுதத் தாய்மொழியான தமிழ்மொழியை மறந்தும், துறந்தும், ஒதுக்கியும், விலக்கியும், மறுத்தும், வெறுத்தும், அன்னிய மொழிகளுக்கு அடிமையாகி வாழ்க்கை நடத்த முயன்று வருகிறார்கள்.

அதாவது இப்படி யெல்லாம் கூலி வாழ்க்கை, போலி வாழ்க்கை, அடிமை வாழ்க்கை, நடைப்பிணமாக வாழும் சாரமற்ற வாழ்க்கை வாழுவதில்தான் நமது மக்கள் பேரார்வமுடையவர்களாக இருக்கிறார்கள். இவற்றை யெல்லாம் மாற்றுவதற்கு கருத்துப் புரட்சியோ, சிந்தனைப் புரட்சியோ, எண்ணப் புரட்சியோ, செயல் முயற்சியோ உண்டாக்க வேண்டுமென்றால் மதவழியில் மறுமலர்ச்சிகளை உருவாக்கினால்தான் முடியும்! முடியும்!! முடியும்!!!

இப் பேருண்மை இன்றுள்ள அரசியல்வாதிகள், சமுதாயவாதிகள், மதவாதிகள், ... முதலியவர்களில் பலருக்கு நன்கு தெரியும்! தெரியும்!! தெரியும்!!! ஆனுல், யாருமே தங்களுக்கு தெரிந்த பேருண்மையை எள்முனையளவு கூட வெளியிடாமல் தங்கள் தங்களுடைய தன்னலத்திற்காகவும், பதவி ஆசைகளுக்காகவும், பண ஆசைகளுக்காகவும், சொந்த பேராசைகளுக்காகவும் இப் பேருண்மையை மூடி மறைத்து தமிழ்மொழி விடுதலைக்கும், தமிழ் இன விடுதலைக்கும், தமிழ் மத விடுதலைக்கும் விரோதிகளாக, துரோகிகளாக வாழ்ந்து கொண்டு இருக்கின்றுர்கள்! வாழ்ந்து கொண்டு இருக்கின்றுர்கள்!! வாழ்ந்து கொண்டு இருக்கின்றுர்கள்!!!

இப்படி இவர்கள் சுயநல வெறியர்களாக இன்னும் எவ்வளவு காலம்தான் வாழுவார்கள் என்று தெரியவில்லை. எனவேதான், இன்றைய பதினெண்சித்தர் பீடாதிபதி, பத்தாவது பதினேராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் நிகழ்ச்சிகள் தொடர்பாக இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும், அருட்பணி விரிவாக்கத் திட்டத்தையும், தமிழின மொழி மத விடுதலை இயக்கத்தையும், இது தொடர்பான பல்வேறு நிறுவனங்களையும் உருவாக்கி நாடு தழுவிய பணிகளை ஆற்றி வருகிறுர். இவற்றை இன்னும் இந்த இருபதாம் நூற்றுண்டு மக்கள் தெரிந்து கொள்ளவில்லை, புரிந்து கொள்ள முற்படவில்லை. எனவே, தங்களைப் போன்றவர்களாவது குருதேவரின் முயற்சிகளுக்காக ஒத்துழைக்க முன்வாருங்கள்.

e) நமது குருதேவர்தான் சாதி, மத, இன, மொழி வேறுபாடு இன்றி எல்லோரையும் அருளாளர்களாக ஆக்குகின்றுர். எல்லா மொழிகளின் மூலமும் அருளுலகில் செயல்பட ஏற்பாடுகளை செய்கின்றுர். எல்லா மதங்களையும் சமமாக மதிக்கின்றுர். அத்துடன் எல்லா மதங்களும், எல்லா இனங்களும் தன்னுரிமையோடும், தனித்த பெருமையோடும் வாழ வேண்டும், வாழ வேண்டும், வாழ வேண்டும் என்று தெளிவாகக் கூறுகின்றுர்.

மேலும் இவர்தான் மனித வாழ்வுக்குப் பொருள் கூறக் கூடிய வரியியல் (கைரேகை), பிறப்பியல் (சாதகம்), அங்கவியல் (சாமுத்திரிகா இலட்சணம்), ... முதலிய அனைத்து வகையான அருட்கலைகளையும் விரும்புகிறவர்களுக்குத்தான் கற்றுத் தருகிறார். அது மட்டுமல்ல தமது பணிகள் அணி பெறுவதற்கு பொருள் முக்கியம் இல்லை, மனிதர்கள்தான் முக்கியம் என்ற தத்துவத்தைச் செயலாக்கி வருகின்றார். எனவே, நமது குருதேவர் தம்மிடம் வரக்கூடிய அனைவரையும் அருளுலகப் பொருளுலக மலர்ச்சிக்காக, மறுமலர்ச்சிக்காக பாடுபடக் கூடியவர்களாகத் தயாரித்துக் கொண்டு வருகின்றார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

தங்களிடமிருந்து அடிக்கடி அஞ்சல் தொடர்பை குருதேவர் எதிர்பார்க்கின்றார். பல்வேறு அலுவல்களுக்கிடையில் குருதேவர் இவ்வளவு பெரிய நெடிய அஞ்சலை எழுதுகிறார் என்றால் குருதேவர் தங்களுக்கு எத்தகைய சிறப்பையும், முதன்மையையும் வழங்கி இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். எனவே, பதினெண்சித்தர் மடத்தின் வளர்ச்சிக்காகவும், வளவளர்ச்சிக்கும் பாடுபடுங்கள்.

உடன் பதில்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**அன்பு**

**தலைமைப்பீடம்,**

**22-4-89, நள்ளிரவு.**

<u>**பி.கு.:**</u> இவற்றிற்கு 4, 5 xerox copies எடுத்து தலைமைப்பீடத்திற்கு அனுப்பி வையுங்கள்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ. மணி அவர்களின் கையெழுத்தில் கிடைத்தது.//**

ஓம்

# <u>நலம் நாடும் திருவோலை</u>

தலைமைப்பீடம்,
18-3-89.

அன்பு மகள், திருவருட் செல்வி, அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் சன்னிதானம் சித்தரடியாள் K.சமுத்திரவள்ளிக்கு

ஞானத்தந்தை, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள் வாழ்த்தி விடுக்கும் **நலம் நாடும் திருவோலை.**

1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்கள் அருட்துணையே!

2) தங்களின் 16-3-89ஆம் தேதியிட்டு அனுப்பிய அஞ்சல் கிடைத்தது. மகிழ்ச்சி.

3) உன்னுடைய மிகத் தெளிவான சிந்தையும், வலுவான நெஞ்ச உரமும், அழுத்தமான கொள்கைப்பிடிப்பும் மிகுதியாகப் பாராட்டப் படுகின்றன. வாழ்க நீ! வளர்க நீ!

4) பொதுத் தொண்டு ஆற்றப் புறப்பட்டு இருக்கின்ருய்; எந்த நேரத்திலும் எதிர்ப்போ, பகையோ, பழியோ ஏற்படலாம். அது கண்டு அஞ்சாமல் பெண் சிங்கம் போல் செயல்பட வேண்டும் நீ. வாழ்க! வளர்க!

5) திருவையாற்றில் இருந்து அவரவர்கள் ஓய்வு, வாய்ப்பு வசதிகளுக்கு ஏற்பத்தான் திரு பழனியாண்டி, திரு A.P. திருஞானசம்பந்தம், திரு N. சங்கரன் ஆகியோர் வருவார்கள். மூன்று பேரும் சேர்ந்து வாராவாரம் வர வேண்டும் என்பது இயலாது. ஆனுல், யாராவது ஒருவர் கட்டாயம் வர வேண்டும் என்று இதன் மூலம் குருவாணை விடுக்கின்ரேம். ஆகையால் இந்தத் திருவோலைக்கு நகல் எடுத்து

அஞ்சல் வழியாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்திடுங்கள். எல்லாம் வெற்றியாகட்டும்! நலமாகட்டும்!

6) முடிகயிறும், தாயத்தும், சக்கரங்களும், குருதேவரின் படங்களும், புத்தகங்களும் விரகாலூர் வட்டாரங்களில் வழங்குவதற்கு சமுத்திரவள்ளியாகிய நீ மட்டும்தான் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றாய் அருளுலகத்தவர்களால். எனவே, காலப்போக்கில் நீயாகவே விரும்பினால்தான் அல்லது அருளுலகத்தவர்கள் விரும்பினால்தான் இதில் மாற்றம் ஏற்படும். எனவே, நீ உன் மனச்சாட்சிப்படி உலகியல் வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப மேற்படி பொருள்களை யாகத்திலும் விற்கலாம். உன் வீட்டில் வைத்தும் விற்கலாம். கவலை வேண்டாம். வாழ்க! வளர்க!

7) அருளுலகில் பல செய்திகளையும், கருத்துக்களையும், அநுபவங்களையும், பிறரைப் பற்றி உனக்குக் கிடைக்கக் கூடிய செய்திகளையும் கட்டாயமாக இரகசியமாகத்தான் காப்பாற்றியேயாக வேண்டும் நீ. **எச்சரிக்கை**. அன்பார்ந்த அறிவுரை. பொறுமையோடும் செயல்படுக.

8) நீ அருளுலகத்தவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறாய். எனவே, நீ தேவ மகளாவாய். தெய்வ மகளாவாய். அதனால் இதுவரை குருதேவர் அச்சிட்டவைகளையும், எழுதி குவித்த நகல்களையும் வரவழைத்துப் பத்திரமாகப் பாதுகாத்து; பலமுறை படித்து தெளிவு பெறுக.

9) உன்னிடம் என்னென்ன புத்தகம் இருக்கின்றது, உனக்கு என்னென்ன புத்தகம் தேவையாக இருக்கிறது என்று எழுதினால் உடனே அனுப்பி வைக்கப்படும்.

10) அருள்மிகு திரிபுரமெரித்த அவிர்சடைக் கடவுள் சன்னிதானம் D.M. திரு பெ.சுப்பையா B.E. அவர்கள் தலைமைப்பீடத்திலேயே இருக்கிறார். அதனால் இன்னும் ஒரு மாத காலம் அவர் அங்கு

வர ஆகும். அவர் நேரில் தங்களுக்குரிய புத்தகங்கள் கொண்டு வருவார். அவசரமானுல் உடனே எழுது. அனுப்பி வைக்கின்றேம்.

11) அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் சன்னிதானம் உன்மீது மிகுந்த அன்பு கொண்டு உனக்கு 'அருள்வழங்கு பண்டாரம்' என்ற அருட்பட்டங்களை வழங்கியிருக்கிருர்கள் என்பது தெரிவிக்கப் படுகிறது. எனவே, அடிக்கடி சமயபுரம் மாரியம்மன் கோயிலுக்கு வசதி வாய்ப்புப் போல் போய்வர முற்படுக!

12) உன் தங்கைக்காக கட்டாயமாக பூசைகள் செய்யப்படும். கவலை வேண்டாம். நீ பணம் தந்தால்தான் பூசைகள் நடக்கும் என்ற நிலை இல்லை. உன்னுடைய வேண்டுகோளும், பரிந்துரையும் உடனுக்குடன் ஏற்றுக் கொள்ளப்படும், செயலாக்கப்படும், கவலை வேண்டாம். ஏனென்றுல், உன் மூலம்தான் திருச்சி, தஞ்சாவூர், பெரியார் மாவட்டங்கள் மிகச் சிறந்த வளர்ச்சியினை அடைய வேண்டும். நீ நமது கருத்துக்களை உரையாடல்களாகச் சொல்லவோ, மேடைகளில் பேசவோ உன்னைத் தயாரித்துக் கொள். இன்னும் சொல்லப் போனுல், பிரஞ்சு நாட்டு விடுதலைக்காக போரிட்டு வெற்றி பெற்ற வீராங்கனை சோன் ஆப் ஆர்க் (Joan of Arc) வீரப் பெண்மணியைப் போல் நம் நாட்டின் இனம், மொழி, மதம் விடுதலை இயக்க வெற்றிக்காக பாடுபட வேண்டும். உன்னுல் முடிந்தவரை மாதம் ரூ.5/- செலுத்தக் கூடிய அல்லது மாதத்திற்கு 50 பைசா செலுத்தக் கூடிய தமிழின மொழி மத விடுதலை இயக்க உறுப்பினர்களையும் சேர்த்து தனித்தனி நோட்டுப்புத்தகத்தில் வரவு வைத்து இயக்க உறுப்பினர்கள் நிறைய சேர்க்க வேண்டும். இதில் 21 பேர் சேர்ந்தால் ஒரு கிளை இயக்கம் நியமித்து ..... ........ ....

[*அஞ்சல் நகல் முழுமையாகக் கிடைக்கவில்லை*]

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சிறுமுகை சித்தரடியாள் திருமதி தனபாக்கியம் கோபால் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# <u>அருளாட்சி அமைப்புப் பணித் துவக்கத்தின் இரகசியங்கள்</u>

(1) தென்மண்டல அ.வி.தி. தலைவர் அருள்மிகு மதுரை மாமூதூர் ஆலவாய்த் தத்தனேரி சுடலைப் பத்திரகாளி சன்னிதானம் ச.துரைராசன் B.Sc. அவர்கள் சமூகத்திற்கு,

நான் அருளாட்சி அமைப்புப் பணியைத் துவக்கிய மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே இமயம் முதல் குமரி வரை உள்ள காளிகள், கூலிகள், சூலிகள், நீலிகள், இவற்றிற்குரிய தேவிகள், பனி மூடிய தென் இமயமலைப் பகுதிகளில் வாழும் "<u>மாதா சீ</u>" <u>(மாதா ஜீ)</u> எனப்படும் சத்திநிலைப் பெண்டிர்கள், சமாது நிலை கொண்டருளு சித்தர்கள், சித்தியாளர்கள், எந்தக் கட்டுப்பாட்டுக்கும் எளிதில் உட்படாத சிறு தெய்வங்கள், பேய், பிசாசுகள், அலைந்து திரியும் ஆவிகள், வேற்று நாடுகளைச் சேர்ந்த '**<u>ஜின்</u>**' எனப்படும் '**<u>சென்</u>**கள்', வேதாளங்கள், நான்கு யுகங்களிலும் ஆட்சிநிலை பெற்றிருக்கும் பேராற்றல்மிகு ஈசுவரப் பட்டம் பெற்ற முனிவர்கள், இருடிகள், ஐந்தரத்தார்கள், ஐந்திரத்தார்கள், ஐந்திறத்தார்கள், மந்திரத்தார்கள், மந்திறத்தார்கள், மந்தரத்தார்கள் எனப்படுவோரெல்லாம் வெளிக் கிளம்பி நமக்கு நேரடியாகவே உதவ வந்து விட்டார்கள், வந்து கொண்டு இருக்கிறார்கள்.

... ... ...

**//உண்மை நகல்//**

**//மூலம்: சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்த உள்நாட்டஞ்சலின் நகல். நாமக்கல் சித்தரடியான் திரு தொ.பொன்னுசாமி அவர்களின் நகலும் கிடைத்தது.//**

# ஞானம், அருள் என்பதின் விளக்கம்

"ஞானம் என்பது '**அறிவுரை**', '**அறிவார்ந்த அருளுரை**' என்ற இரண்டையும் கண்களாக, கைகளாக, கால்களாகப் பெற்றது. அதே நேரத்தில் அருள் என்பது '**அருளுரை**', '**அருளார்ந்த அறிவுரை**' என்ற இரண்டையும் கண்களாக, கைகளாக, கால்களாகப் பெற்றது. இதன் விளக்கம்தான் முதலாவது பதினெண்சித்தர் பீடாதிபதி 'ஞானி அருளாளனாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை; அருளாளன் ஞானியாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அதாவது, அருளாட்சி நாயகமாகத் தோன்றும் பதினெண்சித்தர் பீடாதிபதி, தத்துவ நாயகமாக இருக்கத் தேவையில்லை' என்று தமது அரச பாரம்பரியத்தில் மிகத் தெளிவாகத் தாம் ஓர் அரசியல்வாதி மட்டுமே என்று குறிப்பிடும் போது விளக்குகிறார்" => *பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் குருபாரம்பரிய வாசகம்.*

இதன்படிதான், பதினெண்சித்தர் பீடாதிபதிகளில் சிலர் முழுமையாக அரசியல்வாதிகளாகவும், சிலர் முழுமையாகச் சமுதாயவாதிகளாகவும் இணைந்த நிலையில் செயல்பட்டு இருக்கின்றனர். அப்படிப் பட்டவர்கள் மட்டுமே அருளாட்சி நாயகமாகவும் தத்துவ நாயகமாகவும் விளங்க முடிகின்றது. எனவேதான் விண்ணையும், மண்ணையும் இணைத்திடும் உரிமையும், பெருமையும் பெற்ற இராசிவட்ட நிறைவுடையாராகிய யாம், கருவிலே திருவுடையாராகத் தோன்றியும் ஓகியாகவோ, யோகியாகவோ, மோகியாகவோ, போகியாகவோ மட்டும் வாழ்ந்திடாமல் பால்குடிப் பருவத்திலிருந்தே இரவு பகலாகப் பாடுபட்டு நூற்று மூன்று (103) அருட்பட்டங்களுக்கு மேல் முறையான பயிற்சிகளாலும், நிறைவான முயற்சிகளாலும் அடைந்தும் தேனீயைப் போல் சுறுசுறுப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**//27-07-1988இல் குருதேவர் அவர்கள் எழுதிய அஞ்சலில் தந்த விளக்கம்.//**





மெய்ஞ்ஞானக்கொடி



தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் (கி.பி.785 – 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

“இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”

– குருபாரம்பரிய வாசகம்.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://books.gurudevar.org

https://gurudevar.in https://gurudevar.org

https://induism.org Email: indhuism@gmail.com

காணிக்கை: ரூ.10/-